




# Keystone

A GROUP FOR ECO- DEVELOPMENT INITIATIVES





The concept of "keystone" emerges from the nest-building behaviour of some birds in nature. These permanent nest structures serve as habitat for several life forms. Such "keystone" species become crucial in providing opportunities for other associated beings to grow and evolve. Thus, Keystone Foundation is born out of a simple ecological principle of the interdependence of natural systems.

## கோட்பாடு

கீஸ்டோன் என்பதன் கோட்பாடு, இயற்கையில் சில பறவை இனங்கள் கூடுகட்டும் பழக்கங்களிலிருந்து தோன்றியதாகும். இவ்வினங்கள் அமைக்கும் நிரந்தரமான கூடு அமைப்புகள் பலவிதமான உயிர்வடிவங்களுக்கு வசிப்பிடமாக திகழ்கின்றன. இத்தகைய கீஸ்டோன் இனங்கள் தாம் சார்ந்துள்ள உயிரினங்கள் வளரவும், பரிணாம வளர்ச்சி அடையவும், வாய்ப்புகள் வழங்கிட மிக முக்கியமான பங்களிக்கின்றன. ஆகவே கீஸ்டோன் நிறுவனம் இயற்கையில் ஒன்றையொன்று சார்ந்து வாழும் உயிரினங்களின் எளிமையான சுற்றுச்சூழல் விதிமுறையிலிருந்து தோன்றியதாகும்.

# Our Mission is to enhance the Quality of Life and the Environment



## Our Goal


To work on issues of Natural Resources and Rural Development, with Indigenous People in mountainous and adjoining regions, addressing the challenges of conservation, livelihoods and enterprise development, through appropriate-knowledge and action, technologies, socio-economic innovations and institutions.



# வாழ்க்கை தரத்தையும், சுற்றுச்சூழலையும் மேம்படுத்துவதே நமது குறிக்கோள்

## இலக்கு

இயற்கை வளங்கள் மற்றும் கிராமப்புர வளர்ச்சியில் மலைப்பகுதிகளிலும் மலைச்சார்ந்த பகுதிகளிலும் வசிக்கும் பழங்குடி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் இத்துடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வாழ்வாதாரங்கள், வர்த்தகத்தில் முன்னேற்றம் ஆகியவற்றில் உள்ள சவால்களை உகந்த அறிவுத்திறன் மற்றும் செயல்திறன், தொழில்நுட்பங்கள், சமூக பொருளாதார புதுமைகள் மற்றும் சபைகள் கொண்டு அணுகுவது.



# Community Forest Resource

Community Forest Resource(CFR) refers to common pool forest resources associated with specific communities. These are most often tracts of forests that are part of the community's ancestral domain. Here in the NBR, CFR represents many dimensions of indigenous life – habitational space, food collection zone, grazing lands, fishing streams, non-timber forest produce collection areas, sacred groves and simply an area of jurisdiction associated with a particular clan/tribe. The concept of seemai or yellai (boundary) connotes a CFR in the region.

Today, many indigenous communities have moved out of their old lands in search of basic amenities, respite from wildlife raids and in search of better wage opportunities. Aspects of CFR governance that once derived from traditional leadership systems have diminished in the face of State led forestry programmes. It is our endeavour to revive and strengthen indigenous systems of governance over CFR in the interests of both conservation of these forests and livelihoods of the indigenous forest dwelling people of the NBR.



## சமுதாய வனவளங்கள்


சமூக வன வளங்கள் என்பது ஒவ்வொரு பழங்குடியின சமுதாயத்துடன் ஒருங்கிணைந்துள்ள பொதுவான வனவளங்களை அறிவிக்கின்றது. இந்த வனவளங்கள் அனைத்தும் பொதுவாக பழங்குடியின சமுதாயங்களின் முன்னோர் வகுத்த எல்லைகளுக்குட்பட்ட மீதமுள்ள காடுகளாகும்.

நீலகிரி பல்லுயிர் சூழல் மண்டலத்தினுள் சமூக வனவளங்கள் பழங்குடியினரின் வாழ்வியலில் பல்வேறு கோணங்களை உட்கொண்டுள்ளது இவற்றுள் வசிப்பிடங்கள். உணவு சேகரிக்கும் பகுதிகள். மேய்ச்சல் நிலங்கள், மீன்பிடிக்கும் நீரோடைகள், மரம் அல்லாத வனப்பொருட்கள் சேகரிக்கும் பகுதிகள், தெவசோலைகள் இவைமட்டுமல்லாது பாரம்பரிய நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டிய எல்லைகளாகவும் பழங்குடியின சமுதாயத்தனரிடையே இருந்து வருகிறது. சீமெ அல்லது எல்லை எனும் சொற்கள் ஒவ்வொரு சமுதாயத்திற்குட்பட்ட பொது வனவளங்களை குறிக்கும் வகையில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

இன்றைய நிலையில் பழங்குடியின மக்கள் தங்களுடைய பாரம்பரிய நிலங்களை விட்டு கூலி வேலைகளை தேடியும், மின்சாரம், குடிநீர் போன்ற அத்தியாவசிய தேவைகளை பெறவும், வனவிலங்குகளுடன் ஏற்படும் மோதல்களை தவிர்க்கவும் வெளியேறி வருகின்றனர்.

மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ள வனப்பாதுகாப்பு திட்டங்கள் சமூக வனவளங்களின் அங்கங்களான வன ஆளுமை மற்றும் பாதுகாப்பு குறித்த பாரம்பரிய தலைமை பொறுப்புகள் மற்றும் கட்டுகோப்புகளை வெகுவாக குறைத்துவிட்டன.

சமூக வனவளங்களை, பாரம்பரிய ஆளுமை முறைகளை முன்னிறுத்தி வலுப்படுத்துவதன் மூலம் சமூக வனங்களை பாதுகாப்பதோடு பழங்குடியின மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதே எங்களின் முயற்சியாகும்.





# Forest Rights

The Nilgiri Biosphere Reserve is an area of high biodiversity that is home to several indigenous people. Both existing customs and written documentation bear testimony to the inextricable linkages of the local indigenous peoples with their forest habitats. A wide range of interactions from food collection to community worship is evident. State policy including current and colonial regimes have not always been cognizant of these interactions. A series of land use changes including the introduction of forest plantations, plantation crops and rails roads have served to decrease the accessible area under forests. The Joint Forest Management Programme largely restricts the role of indigenous communities to 'benefit sharing', without recognizing the potential of enlisting indigenous forms of forest governance.

In this context, the Scheduled Tribes and Other Traditional Forest Dwellers'(Recognition of Forest Rights) Act, 2006 is a long awaited legislation. Clearly identifying the rights of indigenous people over traditional forest resources and securing community tenure over these, the Act empowers the gram sabha to participate in forest governance as an integral part of local self governance.

We understand that community level forest governance is an vital link for effective and democratic environmental governance in the region. Our efforts in this regard are two pronged. On the one hand, towards strengthening the capacities of local indigenous communities to stake claims to their forest resources while on the other hand, working within communities to facilitate discussions on systems of forest governance that are rooted in cultural understanding of forests, ancestral domains and the role of humans in forest conservation.



## வன உரிமைகள்

நீலகிரி பல்லுயிர் சூழல் மண்டலம் மிகுந்த பல்லுயிர்களை கொண்டது மட்டுமல்லாது பெரும்பாலான பழங்குடியின மக்களின் வாழ்விடமாகும். காலந்தொட்டு நிலவிவரும் சம்பிரதாயங்களுடன் எழுத்துவடிவில் பதிவாக்கப்பட்ட பதிவேடுகளும், தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் பழங்குடியின மக்களும் அவர்களின் வன இருப்பிடங்களும் தனித்தனியாக பிரித்திட முடியாதவை என்பதற்கான சான்றுகளாகும்.



வனங்களுடன் இந்த சமுதாயங்களுக்கு உள்ள தொடர்பு, உணவு சேகரிப்பு முதல் சமுதாய வழிபாடு முறைகள் வரை சான்றுகளாக உள்ளன. ஆங்கிலேயர் காலம் முதல் தற்காலம் வரை எடுக்கப்பட்ட அரசின் கொள்கை முடிவுகள் இந்த தொடர்புகளை கருத்தில் கொள்ளவில்லை. வரிசையாக செய்யப்பட்ட நில பயன்பாட்டு மாற்றங்கள் வனங்களில் மரம் வளர்ப்பு, தோட்டக்கலை பயிர்கள் மற்றும் புகைவண்டி தண்டவாளங்கள் போன்றவை வனங்களுடன் உள்ள தொடர்புகளை வெகுவாக குறைத்துவிட்டன. கூட்டு வன மேலாண்மை திட்டமும் கூட பெருமளவில் பழங்குடியின மக்களின் பங்கை இலாபம் பிரிப்பது என்ற அளவில் மட்டுமே செயல்படுத்தி பழங்குடியின மக்களின் வன ஆளுகை முறைகளை கருத்தில் கொள்ளாமல் இம்மக்களின் பங்களிப்பை குறைத்துவிட்டன.



இத்தகைய சூழ்நிலையில் பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரிய வனங்களில் வசிப்போர்(வன உரிமைகளை முறையாக்குதல்) சட்டம் 2006 வெகுகாலமாக காத்திருந்த ஓர் சட்டமாகும். பழங்குடியின மக்களின் வனம் சார்ந்த உரிமைகள் மற்றும் சமுதாய உரிமைகளை தெளிவாக கண்டறிவதன் மூலம் இந்த சட்டம் கிராமசபை அமைப்புகளுக்கு வன ஆளுகை மற்றும் உள்ளூர் சுயாட்சி போன்ற அதிகாரங்களை உறுதிப்படுத்துகிறது. நமக்கு புரிந்த வகையில் சமுதாய அளவிலான வன ஆளுகை மண்டல அளவில் மிகவும் பயனுள்ள ஜனநாயக வழி சுற்றுச்சூழல் ஆளுகைக்கு முக்கிய இணைப்பாகும். இவ்வகையில் நம்முடைய முயற்சிகள் இரண்டு வழிகளில் செயல்படும் ஒருவகையில் பழங்குடியின மக்களின் வன உரிமைகள் கோரும் திறன்களை வலுப்படுத்துவதும் மற்றொரு வகையில் பழங்குடியின சமுதாயங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் பாரம்பரியங்களில் மற்றும் கலாச்சாரங்களில் உள்ள சிறந்த அம்சங்களை நடைமுறைப்படுத்த பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு சுமூக சூழலை உருவாக்கி வனப்பாதுகாப்பில் மனித இனத்தின் பங்கை முழுமையாக ஏற்றுக்கொள்வதாகும்.

# Sustainable Livelihoods Programme

# வளம் குன்றாத வாழ்வாதார திட்டம்





### Context

The interventions are with adivasi communities in the Nilgiri Biosphere Reserve. They are mainly of hunting gathering/pastoral tradition. Some practice rainfed agriculture and have land between 1-3 acres on the average. Approximately 30% families are landless and depend on wage labour in estates and farmlands.

The villages are mostly in remote locations amongst forests. Issues of human wildlife conflict, restrictions due to Protected Areas are common here. The current policy context is focussed on land tenure through the Forest Rights Act, for both individual and community claims.

### சூழ்நிலை

நீலகிரி பல்லுயிர் சூழல் மண்டலத்தில் வாழ்ந்துவரும் பழங்குடியின மக்களிடையே குறிப்பாக வளம் குன்றாத வாழ்வாதார திட்டம் செயல்படுகிறது. இங்கு வாழும் பழங்குடியின மக்கள் வேட்டையாடுதல் வனவிளைப்பொருள் சேகரித்தல் மற்றும் கால்நடை மேய்சசலை சார்ந்தவர்கள். சராசரியாக ஒன்று முதல் மூன்று ஏக்கர் நிலம் உடையவர்கள் மழைசார்ந்த விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர் மேலும் ஏறக்குறைய 30சதவீத குடும்பங்கள் நிலமற்ற நிலையில் தோட்டங்களிலும் விவசாய கூலி வேலையையும் சார்ந்துள்ளனர்.

பெரும்பாலும் பழங்குடியின கிராமங்கள் காடுகளிடையே தொலைவில் அமைந்துள்ளன. பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் அதிகமாக இருப்பதால் பிரவேசிப்பதில் தடைகளும் மனித மற்றும் வனவிலங்கு மோதல்களும் எப்பொழுதுமே பிரச்சனைகளாக உள்ளன, இந்திய வன உரிமை சட்டத்தின் கீழ் தற்போதைய கொள்கை சூழல் பழங்குடியின மக்களின் தனிநபர் நிலம் மற்றும் சமுதாய நில உரிமைகளை நிலைநாட்டுவதில் முனைப்பாக உள்ளது.



## Livelihood Programme of Keystone

## கீஸ்டோன் நிறுவனத்தின் வாழ்வாதார திட்டப்பகுதிகள்

**1. NTFP**

- Sustainable harvesting methods
- Traditional methods, tools and knowledge concerning forests/harvesting
- Training and Capacity Building – programmes and resource material
- Improved Quality of produce – setting standards
- Better prices/returns to the harvester
- Local Value addition – Production centres – using local/appropriate technology innovation
- Local Retail Marketing
- Training in Management (accounting, stocks) and business dealings
- Nurseries for planting NTFPs and other forest species
- Promotion of subsistence needs: wild foods and traditional medicine

**1. மரம் அல்லாத வனவிளைப்பொருட்கள்**

- வனம் குன்றாத வனவிளைச்சல் சேகரிக்கும் வழிமுறைகள்
- வனம் மற்றும் வனவிளைப்பொருள் பற்றிய பாரம்பரிய நெறிமுறைகள், கருவிகள் மற்றும் அறிவாற்றல்
- பயிற்சி மற்றும் திறன் கூட்டுதல் - திட்டங்கள் மற்றும் வளமை கூட்டும் தகவல்கள்
- வரையறைகள் மூலம் விளைப்பொருட்களின் தரத்தை உயர்த்துதல் மற்றும் நிர்ணயித்தல்
- சேகரிப்பில் ஈடுபடுவோருக்கு நியாயவிலை கிடைப்பதை உறுதி செய்தல்
- உள்ளூர் மதிப்புக்கூட்டு மையங்கள் மற்றும் கிராம அளவில் மதிப்புக்கூட்டுதல் ஆகியவற்றை உள்ளூர்
- அளவில் புதுமையான, உகந்த தொழில் நுட்பங்கள் மூலம் செயலாக்குதல்
- உள்ளூர் சில்லரை வர்த்தகம்
- வர்த்தகம் மேலாண்மை, வரவுசெலவு கணக்கு, கையிருப்பு பொருட்கள் மற்றும் வர்த்தகம் பற்றிய பயிற்சி
- மரம் அல்லாத வனமகசூல் செய்யப்படும் தாவரங்கள் மற்றும் இதர வன தாவரவகைகளை நாற்றங்கால்களில் உருவாக்கி நடவு செய்தல்
- வன உணவுவகைகள் மற்றும் மூலிகை செடிகள் மூலம் வனம் சார்ந்த சுய தேவைகளை பூர்த்தி செய்தல்



**2. Agriculture and Beekeeping**

- Soil and Moisture conservation
- Seed banks for traditional seeds
- Setting up nurseries for farm crops and high value spices
- Promotion of millets and other diverse crops for food /nutrition
- Fencing – low cost methods to prevent wildlife crop raiding
- Minor irrigation support – gravity flow, solar pumps
- Ploughing support in lowland agriculture lands
- Small credit for seeds and agri inputs
- Instalment based tools (asset) purchases by individual farmers
- Promotion of organic methods
- Buy back support for few crops
- Beekeeping for interested farmers for honey production (income) and self use (nutrition)

**2. வேளாண்மை மற்றும் தேனீ வளர்ப்பு**

- மண்வள மற்றும் நீர்வள பாதுகாப்பு
- பாரம்பரிய விதைகளுக்கான விதை வங்கிகள்
- உயர்மதிப்புள்ள வாசனை திரவியங்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு நாற்றங்கால்கள் அமைத்தல்
- குறுதானியங்கள், பல்வகை பயிர் வேளாண்மையை ஊக்குவித்து உணவு மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துதல்
- குறைந்த விலையில் உறுதியான வனவிலங்கு தடுப்புவேலிகள் அமைப்பதன் மூலம் பயிர்களை வனவிலங்குகளினால் ஏற்படும் சேதங்களை தடுத்தல்
- குறுநீர்பிடிப்பு திட்டங்களுக்கு உதவுதல் - குழாய், பள்ளம்நோக்கி வழிந்தோடும் நீர் வேளாண்மை, சூரிய ஒளி நீர் இறைப்பு இயந்திரங்கள்
- விவசாய நிலங்களை உழுவதற்கு துணைபுரிதல்
- விதைகள் மற்றும் விவசாய இடுபொருட்களுக்கு சிறுகடன் உதவி
- விவசாயிகளுக்கு கருவிகள் வாங்க தவணை அடிப்படையில் தனிநபர் மற்றும் குழு அளவில் கடனுதவி
- இயற்கை வழி விவசாய முறைகளை ஊக்குவித்தல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்களை விளைந்தப்பின் கொள்முதல் செய்யும் ஆதரவு முறை
- ஆர்வமுள்ள விவசாயிகளிடம் தேனீ வளர்ப்பை ஊக்குவிப்பதன் மூலம், சுய தேவைக்கு சத்தான தேன், பயிர் விளைச்சலை அதிகப்படுத்தல் மற்றும் கூடுதல் வருமானம் பெறுதல்





**3. Kitchen Garden Promotion - To improve family nutrition and health**

- Clearing and fencing support
- Seeds and saplings
- Regular monitoring

**3. வீட்டு தோட்டங்களை ஆதரிப்பதன் மூலம் சத்தான உணவு வகைகளை பயிரிட்டு குடும்ப ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்**

- நிலத்தை சீரமைக்கவும், வேலி கட்டவும் உதவி
- விதைகள் மற்றும் நாற்றுக்கள் வழங்குதல்
- முறையான கண்காணிப்பு

**4. Smokeless Chulahs – to improve family wellbeing, health and reduce fuelwood consumption**

- Training on design and materials needed
- Installation and Monitoring

**4. புகையில்லா அடுப்புகள் மூலம் குடும்ப ஆரோக்கியம், வாழும் சூழல் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் விறகு உபயோகத்தை குறைத்தல்**

- வடிவமைப்பு மற்றும் தேவையான கட்டுமான பொருட்கள் குறித்து பயிற்சி
- நிறுவுதல் மற்றும் கண்காணித்தல்

**5. Crafts Promotion: to diversify income options, promote crafts and traditional skills**

Initial work on Toda Embroidery, Kota Pottery, Kurumba Paintings, and bamboo basket weaving of the Cholanaicken

**5. கைத்தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் பாரம்பரிய திறமைகளையும் கைவினைப்பொருட்களையும் மேம்படுத்தி வருமானத்தை பெருக்குதல்**

தோடர் சமுதாய மக்களின் பூ தையல், கோத்தர் சமுதாய மக்களின் மண்பாண்டம், குருமர் சமுதாய மக்களின் ஓவியங்கள் மற்றும் சோலாநாயக்கர் சமுதாய மக்களின் மூங்கில் கூடை பின்னுதல் போன்றவற்றின் முதற்கட்ட வேலைகள் தொடக்கம்.

# Culture & People
## Programme in the Nilgiri Biosphere Reserve

# நீலகிரி பல்லுயிர் சூழல் மண்டலத்திற்கான கலாச்சாரம் மற்றும் மக்கள் திட்டம்



In 2004 it was decided to start the Culture and People Programme at Keystone. This has the following elements:

**கடந்த 2004ஆம் ஆண்டு கீஸ்டோன் நிறுவனம் கலாச்சாரம் மற்றும் மக்கள் திட்டத்தை துவங்கியது. இத்திட்டம் பின்வரும் அம்சங்களை கொண்டிருக்கும்**



**1. Health Fund, Nutrition and Population Studies**
- Build an emergency health fund
- Conduct regular population census to monitor small populations of particularly vulnerable tribal groups (PTG)
- Initiate research on medical anthropology for some communities
- Provide appropriate nutritional support to some vulnerable communities eg. Cholanaicken and Kurumba

**1. மருத்துவ நிதி, ஊட்டச்சத்துணவு மற்றும் மக்கள்தொகை ஆய்வுகள்**
- அவசர கால மருத்துவ உதவி என்னும் நிதியை நிறுவுதல்
- மிகவும் நலிவடைந்த பழங்குடியினர் மக்கள்தொகையை தகுந்த இடைவெளியில் கணக்கெடுத்து அந்த மக்கள் தொகை நிலையை கண்காணித்தல்
- தேர்ந்தெடுத்த சமுதாயங்களிடையே மருத்துவ மானிடவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- மிகவும் நலிவடைந்த சமுதாயத்தினரிடையே தகுந்த ஊட்டச்சத்துணவு வழங்க முன்வருதல் உதாரணம் - சோலாநாயக்கன் மற்றும் குருமர் சமுதாயங்கள்

**2. Education and Capacity Building**

The need to build up the younger generation amongst the adivasi community is important. Capacity building to engage in the conservation and development dialogue and garner leadership qualities to address issues concerning a globalised world is important. This includes support for mainstream education, higher education, special leadership grants, skill development training, environment education. A corpus fund supports this effort.

**2. கல்வியறிவு மற்றும் தகுதி மேம்பாடு**
- பழங்குடியின மக்களிடையே வலுவான இளைய தலைமுறையை உருவாக்குவது மிக முக்கியம்
- உலக மயமான இந்த காலக்கட்டத்தில் தலைமை பண்புகளை வளர்ப்பதும் தகுதியை மேம்படுத்துவதும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு அத்தியாவசியமானது
- இதற்கான முயற்சியில் பொது நீரோட்ட கல்வி, உயர்கல்வி, சிறந்த தலைமைப்பண்பு வளர்ச்சிக்கான நிதியுதவி, திறமைகளை வளர்க்கும் பயிற்சிகள், சுற்றுச்சூழல் குறித்த கல்வி ஆகியவை அடங்கும் இந்த முயற்சிக்காக ஓர் சிறப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

**3. Legal Aid, Rights Awareness and Government liaison**
- Training and Claims related to Forest Rights Act in 6 regions
- Depository of Village Documents
- Liaison with Governments at district and state level

**3. சட்ட உதவி உரிமைகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் அரசாங்கத்துடன் தொடர்பு**
- 6பழங்குடியின பகுதிகளில் வன உரிமை சட்டத்தின் கீழ் உரிமைகளை கோருவதற்கான பயிற்சிகள்
- கிராம அளவில் சட்ட ஆவணங்களை பாதுகாக்கும் மையம்
- மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் அரசு துறைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல்

**4. Indigenous Knowledge, Documentation and Information**
- This Adivasi Resource Centre at Keystone is built to house the Culture and People Programme. The centre enables displays, action-research,
- Some examples have been publications and documentation of Sacred Groves of the Kurumbas, medicinal plants of Kurumbas, Wild foods of Irulas and Kathnaickens. The group annually has an indigenous festival calendar and Seemai Sudhi, an internal newsletter in Tamil. This has become a powerful medium of exchange and identity. Documentation of traditional crafts has been done for Kota pottery, Toda Embroidery, Kurumba painting and basketry of Cholanaickens. A community radio for documentation and communication is also being set up.

**4. பாரம்பரிய அறிவாற்றல் பற்றிய பதிவுகள் மற்றும் தகவல்கள்**
- கீஸ்டோன் வளாகத்தில் மக்கள் மற்றும் கலாச்சாரத்திட்டத்தை நடத்த பழங்குடியின வளமை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் பழங்குடியினர் குறித்த காட்சிப்பொருட்களுடன் இங்கு நடத்தப்படும் செயல் சார்ந்த ஆராய்ச்சிகள் குறித்த தகவல்கள் இடம்பெறும்.
- குருமர் சமுதாய மக்களின் தெவசோலைகள், குருமர் இன மக்களின் மருத்துவ குணமுடைய தாவரங்கள், இருளர் மற்றும் காட்டுநாயக்கர் சமுதாயத்தினரின் வன உணவுவகைகள் குறித்த கையேடுகள் போன்றவை பதிவுகள் மற்றும் தகவல்கள் குறித்த வேலைகளுக்கு எடுத்துக்காட்டாகும்.
- இத்திட்டத்தை முன் எடுத்துச்செல்லும் குழு மாதாந்திர செய்தித்தாள் மற்றும் வருடாந்திர நாட்காட்டி ஆகியவற்றை வெளியிடுகிறது. இவையிரண்டும் பழங்குடியின மக்களிடையே தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாக செயல்படுகிறது. இவையல்லாது கோத்தர் சமுதாய மக்களின் மண்பாண்டம். தோடர் சமுதாய மக்களின் சித்திர தையல், குருமர் சமுதாயத்தினரின் ஓவியங்கள் மற்றும் சோலாநாயக்கர் சமுதாயத்தினரின் மூங்கில் கூடை பின்னும் கைத்தொழில் திறமைகள் போன்றவை பதிவு செய்யப்படுகின்றன. இத்துடன் ஒரு சமுதாய வானொலி சேவையும் அமைய உள்ளது.



**5. Identity and Culture**
- Build an adivasi identity for the community through specialized ways as well as common events. A number of `hubbas' or festivals (Indigenous food, Honey, Music and Dance, Stories and Riddles, Sacred Grove, Traditional boundaries). These have been effective to bring together different communities to share their skills and knowledge. The celebration of Indigenous Peoples' Day every year, since 2006 has slowly help build an identity for the communities. A Culture Shop in Kotagiri which makes available ritualistic and traditional material is an attraction and creates easy access.

This programme is managed by adivasis from the whole region, with a woman leader from the Kurumba community. More than 30 men and women across the region from the different communities support this effort.



**5. கலாச்சார அடையாளங்கள்**
- பொது நிகழ்வுகள் மற்றும் சிறப்பு வழிமுறைகள் மூலம் பழங்குடியின மக்களின் கலாச்சார அடையாளங்களை நிலைநிறுத்த வேண்டும்.
- வருடந்தோறும் பாரம்பரிய உணவு, தேன், இசைக்கருவிகள், நடனங்கள், பாரம்பரிய கதை மற்றும் விடுகதைகள், தெவசோலைகள், பாரம்பரிய எல்லைகள் போன்ற பாரம்பரிய சிறப்பம்சங்களை வெளிப்படுத்த ஹப்ப என்னும் விழாக்களை நடத்துதல்.
- இவ்விழாக்கள் பழங்குடியின மக்களின் திறமைகள் மற்றும் பாரம்பரிய அறிவு போன்றவற்றை பரிமாறிக்கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் உதவியாக உள்ளது.
- நம் திட்டத்தின் கீழ் வருடந்தோறும் கொண்டாடப்படும் சர்வதேச பூர்வீககுடியினர் தினவிழா நீலகிரி பல்லுயிர் சூழல் மண்டல பழங்குடியின மக்களிடையே பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ளது.
- கோத்தகிரி பசுமை அங்காடியில் இடம்பெற்றுள்ள கலாச்சார பொருட்கள் மேடையினால் பழங்குடியின சமுதாய சடங்குகளுக்கு தேவையான பாரம்பரிய வனப்பொருட்களை விற்பதன் மூலம் மக்களிடையே கலாச்சார புத்துணர்வு அதிகரித்து வருகிறது.
- மக்கள் மற்றும் கலாச்சாரத்திட்டம், முழுக்க முழுக்க பழங்குடியின மக்களால் மேலாண்மை செய்து செயல்படுத்திவரும் திட்டமாகும். இத்திட்டத்திற்கு குருமர் சமுதாய பெண் தலைமை வகித்து வருகிறார். 30க்கும் மேற்பட்ட பழங்குடியின சமுதாய ஆண்கள் மற்றும் மாதர்கள் உறுதுணையாக இருந்து இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றனர்.



This programme is managed by adivasis from the whole region, with a woman leader from the Kurumba community. More than 30 men and women across the region from the different communities support this effort.

இத்திட்டம் முழுக்க முழுக்க பழங்குடியின மக்கள் தாமாகவே மேலாண்மை செய்து நடந்துவரும் திட்டமாகும். இத்திட்டத்திற்கு ஒரு குருமர் சமுதாய பெண் தலைமையேற்றுள்ளார். 30க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் இத்திட்டத்திற்கு உறுதுணையாக உள்ளனர்.





# **Environmental** Governance

Environmental Governance refers to the processes of decision making that have an impact on the natural environment. In a world where indiscriminate consumption of natural resources is driving many life forms to extinction, it is imperative to engage with environmental decision making. We understand that the fora of these processes are varied and spread across the world and occur at variour levels of human communities, from the family to inter-country fora like those of the UN. The programme area is concerned and engages with :

- Excercise of authority over natural resources and the environment – not just de jure but de facto as well – in both private as well as public domains.
- Institutions (both formal and informal) through which communities shape individual and collective impact on the environment.
- A range of decision makers including lay people, States, corporations, academic institutions and civil society.



## சுற்றுச்சூழல் ஆளுகை

சுற்றுச்சூழல் ஆளுகை என்பது இயற்கையான சுற்றுச்சூழல் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் முடிவுகள் செய்யப்படும் செயல்முறைகளை கருத்தில் கொள்வதாகும். இவ்வுலகில் இயற்கை வளங்களை வரையறை இல்லாமல் உபயோகப்படுத்துவதனால் பல்வேறு உயிரினங்கள் அழிந்துவரும் இவ்வேளையில் சுற்றுச்சூழல் சார்ந்த முடிவுகள் எடுக்கும் முறைகளுடன் ஒருங்கிணைவது மிகவும் அவசியமாகும். சுற்றுச்சூழல் சார்ந்த முடிவுகள் எடுக்கும் செயல்முறைகள் உலகளாவிய அளவில் மற்றும் பல்வேறு விதங்களில் மனித சமுதாயங்கள் குடும்ப அளவிலிருந்து சர்வதேச மற்றும் ஐக்கிய நாடுகள் அளவிலும் பரந்து காணப்படுவது தெளிவாகும். இந்த திட்டப்பகுதி கொண்டுள்ள அக்கறையின் காரணமாக கீழ்கண்ட பங்கேற்போர்களை எதிர்க்கொள்கிறது.

- பொதுத்துறை மற்றும் தனியார் துறை வரம்புகளில் தற்போதைய நிலவரம் மட்டுமல்லாது முந்தைய நிலவரத்தையும் கருத்தில் கொண்டு இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மீது அதிகாரம் செலுத்துதல்.
- சுற்றுச்சூழல் மீது தாக்கங்கள் ஏற்படுத்தும் தனிநபர் மற்றும் குழுக்களாக செயல்படும் முறையான மற்றும் முறையில்லாத அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதல்.
- சுற்றுச்சூழல் மீது தாக்கங்கள் ஏற்படுத்தும் முடிவுகளை எடுக்கும் பொதுமக்கள், மாநிலங்கள், நாடுகள், நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக பொறுப்புள்ள சமுதாய அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதல்.



## **District Environmental** Governance Initiative (DEGI)

The District Environmental Governance Initiative is focussed on engagements with local governments and the district administration in order to mainstream the role of the natural environment in various development programmes of the State. The overall purpose is to facilitate environmentally sustainable development in The Nilgiris district. To this end, the initiative shall facilitate decisions in formulating and implementing policies in response to environment related demands and inputs from society.

The DEGI recognises the role of multi-stakeholder interactions in processes of environmental decision making and works towards strengthening fora of engagement between the State, civil society and business interests.

## மாவட்ட சுற்றுச்சூழல் ஆளுகை முனைவு

மாவட்ட சுற்றுச்சூழல் ஆளுகை முனைவு உள்ளாட்சிகளுடனும் மாவட்ட நிர்வாகத்துடனும் ஒன்றிணைப்பதன் மூலம் மாநிலத்தின் வளர்ச்சி பணிகளில் இயற்கை சூழலின் முக்கிய பங்கு குறித்த தெளிவான கோணத்தை வெளிப்படுத்தும். இம்முனைவின் ஒட்டுமொத்த குறிக்கோள் நீலகிரி மாவட்டத்தில் நிலையான சுற்றுச்சூழல் சார்ந்த வளர்ச்சி திட்டங்களை வடிவமைப்பதாகும். இவற்றை சாத்தியமாக்க இந்த முனைவு சமுதாய மக்களின் தேவைகள் மற்றும் அக்கறைகள் ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் வளர்ச்சி திட்டங்களை செயல்முறைப்படுத்தும் முடிவுகளுக்கு வழிவகுக்கும்.

மாவட்ட சுற்றுச்சூழல் ஆளுகை சுற்றுச்சூழல் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் முடிவுகளில் பல அடுக்குகளில் பங்கேற்போரின் கலந்தாலோசனை மிகவும் முக்கியம் என கருதுகிறது. மேலும் இம்முனைவு மாநில அரசு, தொழில் மற்றும் வர்த்தகம் இவற்றுடன் சமூக உணர்வுள்ள சமுதாயங்களின் தொடர்ந்த ஈடுபாடு ஏற்படும் வகையில் செயல்படும்.








# Particularly Vulnerable Tribal Groups


The Nilgiri Biosphere Reserve is home to over 30 indigenous peoples. Among these 7 groups are identified as Particularly Vulnerable Tribal Groups(PTG) needing special development assistance. They are the Kurumba, Irula, Kota, Toda, Paniya, Kaatunayakan and the Cholanayakan. The PTG are characterised by their declining populations, low levels of literacy and pre-agricultural level of technology.

Scattered across the three States of the NBR, the small populations of the PTG render them almost invisible in all levels of decision making processes, from the local government to the State. Their traditional systems of leadership are mostly in a state of dysfunction. Many of these forest dwelling communities have over of period of 2-3 decades had to radically change their livelihood patterns due to decreasing access to forests. Control over their small land pockets is low due to inavailbility of adequate and timely agricultural credit. Morbidity is high due to genetic conditions like sickle cell anaemia compounded by lack of a balanced diet and long pathways to care.

We understand that political empowerment and inclusion in public decision making processes is critical to helping the PTG articulate their specific needs in development programmes. To this end, we have been trying to facilitate community level decision making groups to liasion with elected representatives and government officials.



















## மிகவும் நலிவடைந்த பழங்குடியின சமூகங்கள்

நீலகிரி பல்லுயிர் சூழல் மண்டலம் 30க்கும் மேற்பட்ட பூர்வீக மக்களின் வாழ்விடமாகும். இவற்றில் ஏழு சமுதாயங்கள் சிறப்பு வளர்ச்சி உதவி தேவைப்படும் மிகவும் நலிவடைந்த பழங்குடியினர் என கண்டறியப்பட்டுள்ளது. குரும்பர், இருளர், கோத்தர், தோடர், பனியர், காட்டுநாயக்கர் மற்றும் சோலாநாயக்கர் சமுதாயத்தினர் சிறப்பு வளர்ச்சி உதவியை எதிர்நோக்கியுள்ளனர். குறைந்துவரும் மக்கள்தொகை, குறைந்தளவு படிப்பறிவு மற்றும் விவசாயத்திற்கு முந்தைய அளவிலான தொழில்நுட்பம் போன்றவற்றைக்கொண்டு நலிவடைந்த பழங்குடியினர் வரையறுக்கப்பட்டுள்ளனர்.

நீலகிரி பல்லுயிர் சூழல் மண்டலத்தில் மூன்று மாநிலங்களிடையே பரந்துகிடக்கும் இந்த சிறிய மக்கள் தொகையை கொண்ட நலிவடைந்த பழங்குடியினர் உள்ளாட்சி அளவிலும் மாநில அளவிலும் எளிதில் அடையாளம் காணப்படாத மக்களாகவே உள்ளனர். பாரம்பரிய தலைமை முறைகள் செயலிழந்து காணப்படுகின்றது. கடந்த 30வருடங்களில் வனம்சார்ந்து வாழும் நலிவடைந்த பழங்குடியினர் தங்களுடைய வாழ்க்கை முறையை தமக்கு ஒவ்வாத வகையில் மாற்ற வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு முக்கிய காரணம் வனங்களை உபயோகிக்கும் உரிமைகள் குறைந்து போனதே. அவர்களுடைய குறு விவசாய நிலங்கள் சரிவர பராமரிக்கப்படாமலும் எவ்விதமான கடனுதவியோ அல்லது வேலைக்கு ஆட்களோ கிடைக்காமல் உபயோகப்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளது. சிக்கில் செல் அனிமீயா மற்றும் கேன்கரீன் போன்ற பரம்பரை நோய்கள் இந்த சமுதாயத்தினரை பாதிப்படைய செய்கின்றது. ஊட்டச்சத்துள்ள உணவு கிடைக்காமலும், வெகு தொலைவு நடந்து சென்று வேலைகள் செய்வதாலும் சராசரி ஆயுட்காலம் மிகவும் குறைந்துள்ளது.

வளர்ச்சி திட்டங்களில் ஓர் சிறப்பு கண்ணோட்டம் மிகவும் நலிவடைந்த பழங்குடியின மக்களுக்கு தரப்பட வேண்டும் என்பது தீவிரமாக பரிசீலிக்க படவேண்டிய முடிவாகும். இம்மாதிரியான முடிவுகளில் பழங்குடியின மக்கள் பங்கேற்க மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அலுவலர்களுடன் தொடர்ந்து சமுதாய அளவில் முடிவுகள் எடுக்க குழுக்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.